**O.S. No. 201 /2018**

**Date: 02.06.2026**

**வா.சா.1 புஷ்பலதா**

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் இருக்கிறார்கள். எனது மகன் பெயர் ராஜ குணசேகரன். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள 1ம் பிரதிவாதி எனது மகனின் மனைவி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனக்கு மருமகள் உறவு முறை. எனது மகன் தற்போது உயிருடன் இல்லை. எனது மகன் 2018ல் இறந்தார். எனது மகன் இறப்பதற்கு முன்பாக LIC policy போட்டு இருந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 2, 3 பிரதிவாதிகளுக்கு 06.08.2018ல் அனுப்பிய அறிவிப்பில் உள்ள சங்கதிகள் எல்லாம் எனக்கு நன்கு தெரியும். நான் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பிற்கு 2,3 பிரதிவாதிகள் 09.08.2018ம் தேதியன்று ஒரு பதில் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது மகன் போட்டுள்ள LIC policyல் 1ம் பிரதிவாதியை தான் நாமினியாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. எனது மகனும், 1ம் பிரதிவாதியும் உடுமலைப்பேட்டையில் தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது மகன் LIC policy போட்ட 2, 3ம் பிரதிவாதி நிறுவனம் உடுமலைப்பேட்டை மற்றும் கோயம்புத்தூரில் உள்ளது என்றால் சரியல்ல. 2, 3ம் பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பில் 1ம் பிரதிவாதிக்கு பாலிசி தொகை 16.07.2018ம் தேதியன்று கொடுக்கப்பட்டுவிட்டது என்ற விவரம் சொல்லப்பட்டிருந்தது என்றால் சரிதான். பணம்பரிவர்த்தனை செய்யப்பட்டது எல்லாம் உடுமலைப்பேட்டை என்பதால் இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு ஆள்வரையறை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 16.07.2018ம் தேதியன்று நாங்கள் பாலிசி தொகையை கொடுக்கப்பட்டுவிட்டதால் 2, 3ம் பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2, 3ம் பிரதிவாதிகளுக்கு எதிரான இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.